
# உடன்பிறப்பே... 80

**நீரை.மகேந்திரன்**

தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த க.சொ.கணேசன் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.




## க.சொ.கணேசன் “கொள்கை வளர்த்த செழுத்தங்கம்!”

*1960-களில், பள்ளி, கல்லூரிகளில் படித்து வந்த இளைஞர்களிடம் பெரும் தாக்கத்தை, பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் தி.மு.கழகமும் ஏற்படுத்தியதில் இருந்து உருவானவர்கள்தான், இன்று நமது அரசியல் முன்னோடிகள். சிற்றூர், பேரூர், மாவட்டம் எனத் தத்தமது பகுதிகளில் கழகம் வளர்த்த முன்னோடிகளில், இன்றைய பெரம்பலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம், தா.பழூர், மீன்சுருட்டி ஆகிய பகுதிகளில் கழகத்தைக் கட்டிக் காத்தவராக முன் நின்றவர் க.சொ.கணேசன்.*

*“உறுதி குலையா கழகப் படையின் ஓர் அங்கம் - குருதி கொட்டிக் கொள்கை வளர்த்த செழுத் தங்கம்” என முத்தமிழறிஞர் போற்றிய உடன்பிறப்புதான் க.சொ.கணேசன். ஜெயங்கொண்டம் பகுதிக் கழகத்தினர் சுருக்கமாக க.சொ.க என்பர்.*

*அன்றைய ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டம், இன்றைய அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், கொள்ளிடம் கீழணைக்கு அருகில், கண்டியங்கொல்லை என்கிற கிராமத்தில், 1941-ஆம் ஆண்டு பிறந்தவர். பெற்றோர் சொக்கலிங்கம்-அஞ்சலையம்மாள். ஆரம்பப் பள்ளிக்குப் பின், ஏழு கிலோமீட்டர் தூரத்தில் மீன்சுருட்டி அரசு உயர்நிலைப் பள்ளியில் 10-ஆம் வகுப்பு வரை பயின்றார். அவரது மாணவப் பருவத்தில்தான் ‘கல்லக்குடிப் போராட்டம்’ அப்பகுதிகளில் அரசியல் எழுச்சியை உருவாக்கி இருந்தது.*

*தனது அரசியல் ஆர்வத்தால் பள்ளியில் மாணவத் தலைவராக உருவான கணேசன், பள்ளிப்படிப்புக்குப் பின்னர் முழுநேரமாக அரசியல் பணிகளில் இறங்கினார். வாடகை சைக்கிளை எடுத்துக்கொண்டு கழகக் கூட்டங்கள் நடக்கும் இடங்களுக்குப் பயணப்படத் தொடங்கி, சிறந்த சொற்பொழிவாளராகவும் மேடை ஏறத் தொடங்கினார்.*

*குறிப்பாக, பகலில் கூலிவேலை முடித்துவிட்டு, மாலையில் கருப்பு சிவப்பு கரைவேட்டியைக் கட்டிக் கொண்டு புறப்படுவது வழக்கம். பொதுக்கூட்டங்களில் கலந்து கொள்வதும், அப்பகுதிகளில் தெருமுனைக் கூட்டங்களை நடத்துவதும் அவரது அன்றாடப் பணிகள். 1962-ஆம் ஆண்டு, அவரது 20 -வது வயதில் தா.பழூர் கிராமத்தில் கலைஞர், எஸ்.எஸ்.ஆர் ஆகியோர் கலந்துகொண்ட பொதுக் கூட்டத்தில், கணேசன் அவர்களும் மேடையேறி சொற்பொழிவாற்றி கழகத்தினரிடம் வரவேற்பைப் பெற்றார்.*

### ஒன்றியச் செயலாளர்

*திருச்சி, தஞ்சை மாவட்டக் கழக முன்னோடிகளாக இருந்த அன்பிலார், கோ.சி.மணி உள்ளிட்ட தலைவர்களுடன் அரசியல் பயின்ற கணேசன், 1964-ஆம் ஆண்டு கழகம் நடத்திய மொழிப் போரில் கலந்துகொண்டு, அரியலூர் அஞ்சலகம் முன் மறியல் செய்து கைதாகி இரண்டு மாதங்கள் சிறைத் தண்டனை பெற்றார். குறிப்பாக, அப்போதைய, அரிசித் தட்டுப்பாட்டின் போது, கோ.சி.மணி உள்ளிட்ட முன்னோடிகளுடன் இணைந்து நெல் கடத்தலைத் தடுக்கும் கழகப் படையாகச் செயல்பட்டவர். கழகம் அறிவித்த அத்தனைப் போராட்டங்களிலும் தவறாமல் கலந்துகொண்டு, வழிகாட்டியாக நின்றவர்.*

*உடையார்பாளையம் வட்டாரத்தில், அவரின் கால் படாத கிராமங்களே இல்லை எனும் அளவுக்குக் களப்பணியாற்றிய கழகக்காரர். அந்தச் செல்வாக்கில்தான், 1967-ஆம் ஆண்டில் கழகத்தின் உள்கட்சித் தேர்தலின்போது, வட்டக் கழகச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கழகத்தின் ஒன்றியங்கள் பிரிக்கப்பட்டு, ஒன்றியக் கழகத் தேர்தல்கள் நடைபெற்றபோது தா.பழூர் ஒன்றியக் கழகச் செயலாளராகத் தேர்வானார். 2000-ஆம் ஆண்டு வரை அந்தப் பொறுப்பில் இருந்து மக்களுடன் மக்களாக நின்று செயல்பட்டவர்.*

### மக்கள் பணிகள்

*நூற்றுக்கணக்கான சுயமரியாதைத் திருமணங்களை நடத்தி வைத்தவர், கணேசன். 1971-ஆம் ஆண்டில், சீரணிப் படையின் தா.பழூர் ஒன்றியச் செயலாளராக மக்கள் பணிகள் செய்தவர். ஜெயங்கொண்டம் நகரின் குடிநீர்த் தேவைக்காக கொள்ளிடத்தில் இருந்து, நீர் கொண்டு வரும் முன்னெடுப்புகளை மேற்கொண்டார். 1972-ஆம் ஆண்டில் அவரது திருமணமும் சுயமரியாதைத் திருமணமாக கலைஞர் தலைமையில் நடைபெற்றது. மணவிழாவுக்கு வந்த கலைஞர், அதே நாளில், ஜெயங்கொண்டம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு, சொ.கணேசன் முன்னிலையிலேயே அடிக்கல் நாட்டியது வரலாற்றுக் குறிப்பு.*

> **“ஜெயங்கொண்டம் பகுதியில் பல எதிர்ப்புகளையும், இழப்புகளையும் சந்தித்து, எது நேர்ந்தபோதும் கழகப் பணியில் பின்வாங்காது நின்ற கொள்கைவாதி, சிறந்த செயல்வீரர்!”**

*1977-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின் போது, ஜெயங்கொண்டம் தொகுதியில் கணேசனைக் களம் இறக்கினார் கலைஞர். ஆனால், அப்போது இருந்த சூழலில் கணேசனின் வெற்றி வாய்ப்பும் பாதிக்கப்பட்டது. அதன்பின் இரண்டு தேர்தல்களில் தலைமைக் கழகத்தின் முடிவுப்படி கூட்டணிக் கட்சி வேட்பாளர்களுக்குப் பணி செய்தவர், 1989-ஆம் ஆண்டு கழகத்தின் சார்பில், போட்டியிட்டு வெற்றி பெற்றார். அதற்கிடையில் 1986-ஆம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தலில், தா.பழூர் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் பதவிக்குக் கழக வேட்பாளராக போட்டியிட்டு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்த வெற்றியை கலைஞரின் கரங்களில் கொண்டு வந்து சேர்த்தார்.*

*ஒன்றியப் பெருந்தலைவராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் அவர் பொறுப்பில் இருந்த காலங்களில் அப்பகுதி மக்களின் தேவைகளை நிறைவேற்ற அரசின் பாலமாக நின்றார். நீர்த்தேக்கத் தொட்டிகள், கிராமப்புறச் சாலைகள், பள்ளிக்கூடக் கட்டடங்கள் என அவர் பெயர் சொல்லும் நினைவுகள் ஏராளம். 1996-ஆம் ஆண்டு, அவர் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே நீலத்தநல்லூர் - மதனத்தூர் இடையே பாலம் அமைப்பதற்கான முயற்சியை மேற்கொண்டர். அந்தக் கோரிக்கையை கலைஞரின் கவனத்துக்குக் கொண்டு சென்று, அதை அறிவிக்கவும் செய்தவர் கணேசன்.*

### இளையவர்களுடன் இணக்கம்

*1972- ஆம் ஆண்டில் கழகத்தில் இருந்து ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் இருந்து பலரும் பிரிந்தபோது, கோ.சி.மணி அவர்களுடன் இணைந்து, அந்த வட்டாரத்தில் கழகத்தினரை அரவணைத்தவர் கணேசன். அதேபோல, 1992-ஆம் ஆண்டில் ஏற்பட்ட கழக நெருக்கடியின்போதும் கொண்ட கொள்கையில் உறுதியாக நின்று, கலைஞரின் கரத்தை வலுவாக்கியவர் கணேசன். **‘சந்தர்ப்பவாதி சம்பத்’** என அவர் 20 வயதில் எழுதிய நூல். அந்த கழகப் பற்றின் ஒரு துளி அளவும் குறையாமல் இறுதிவரை வாழ்ந்தவர்.*

*இவர் ஒன்றியச் செயலாளராக இருந்தபோது, பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு, இன்றைய போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா ஆகியோர் மாவட்டச் செயலாளர்களாக வளர்ந்து வந்தபோது, அவர்களுடன் இணைந்து மூத்த முன்னோடியாக கழக வளர்ச்சிக்கு உடன் நின்றார்.*

*1962-ஆம் ஆண்டு, வட்டக் கழகச் செயலாளரானது முதல், ஐந்து முறை ஒன்றியக் கழகச் செயலாளர் என நீண்ட பயணத்தில், 2000-ஆம் ஆண்டு , தனது பொறுப்பினை இளையவர்களுக்கு அளித்து வழிவிட்டார். 2003-ஆம் ஆண்டில் கழகத்தின் தலைமைச் செயற்குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டார். 2005-ஆம் ஆண்டில் ஆகஸ்ட் 22-ஆம் தேதி கழகத்தின் ஒன்றிய அலுவலகத்தில் இருந்தபோது, எதிர்பாராதவிதமாக மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்தார்.*

*‘‘ஜெயங்கொண்டம் பகுதியில் பல எதிர்ப்புகளையும், இழப்புகளையும் சந்தித்து, எது நேர்ந்தபோதும் கழகப் பணியில் பின்வாங்காது நின்ற கொள்கைவாதி, சிறந்த செயல்வீரர்’’ என அவரது நினைவைப் போற்றினார், அப்போது துணைப் பொதுச் செயலாளராக இருந்த இன்றைய கழகத்தலைவர் அவர்கள்.*

**“பீடு நடைபோட்ட இயக்கத்துப்**
**பெருவீரனே ! நீ**
**வீடு நடை இருக்கத் தூண் ஒன்று**
**வீழ்ந்ததுபோல வீழ்ந்தனையோ !”**

*என கண்களில் கண்ணீர் நிறைய கவிதை வடித்தார் முத்தமிழறிஞர் கலைஞர். ஆம், க.சொ.கணேசன், உடையார்பாளையம், ஜெயங்கொண்டம், தா.பழூர் பகுதிக் கழகங்களின் தூணாக இருந்தார். அந்த இடத்தை அவரது கொள்கை வாரிசுகள் நிரப்பிக் கொண்டிருக்கின்றனர்.*

**...துடிக்கும்**

## ‘தெற்கிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டும்!’

தேசிய அளவில் புகழ்பெற்ற சமூக ஆய்வாளர் யோகேந்திர யாதவ், ‘ஆனந்த விகடன்’ இதழில் ‘லிட்மஸ் பக்கங்கள்’ என்ற தொடரை எழுதி வருகிறார். இந்த வாரம் ‘தென்னிந்தியாவின் குரலை வடக்கு கேட்க வேண்டும்’ என்னும் தலைப்பில், அவர் எழுதியுள்ள கட்டுரையில், ‘திராவிட இயக்கத்தின் தனித்துவம்’, ‘மதவாத பா.ஜ.க.வை முறியடித்த தமிழ்நாடு’ ஆகியவற்றைப் பாராட்டும் அவர், பா.ஜ.க.வை முறியடிக்க அரசியல் பண்பாட்டுத்தளங்களில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டியிருக்கிறார். அவருடைய கட்டுரையிலிருந்து சிலவரிகள்...

‘பெரிய நிறுவனங்கள் தங்கள் வர்த்தகத்தை விஸ்தரிப்பதற்காக, சிறிய நிறுவனங்களை வாங்கிக் கையகப்படுத்தும் வேலையைச் செய்கின்றன. கார்ப்பரேட் உலகத்தின் வழக்கமான இதைத்தான், தமிழ்நாட்டு அரசியலில் பா.ஜ.க. செய்து வருகிறது. அ.தி.மு.க-வின் உடைந்த அணிகள் சிலவற்றை, அது கையகப்படுத்தியுள்ளது. பா.ஜ.க.வை அதன் அசல் வடிவத்தில் தமிழ்நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். அதனால்தான் ‘பி’ டீம், ‘சி’ டீம் என முகமூடிகளை அணிந்து வருகிறார்கள். இந்த அரசியலை மக்களிடம் அம்பலப்படுத்த வேண்டும். சங் பரிவாரின் நிஜமுகத்தை மக்களுக்கு அடையாளம் காட்ட வேண்டும்.

நீண்ட காலமாக வட இந்தியத் தலைவர்கள் தங்கள் யோசனைகளை, கொள்கைகளை, சித்தாந்தங்களைத் தென்னிந்தியாவுக்குச் சுமந்து வந்துகொண்டிருக்கிறார்கள். இன்று நாம் இதை மாற்றவேண்டிய தருணத்தில் இருக்கிறோம். தென்னிந்தியாவின் குரலை, யோசனைகளை, அரசியலை, ஆட்சிமுறையை ஒட்டுமொத்த தேசமும் கவனித்துக் கற்றுக்கொள்ள வேண்டும்.

சமூகநீதி அரசியலையும், உண்மையான கூட்டாட்சி முறையையும், மதச்சார்பின்மையின் சாரத்தையும் பாதுகாக்கும் வழியை, இந்தத் தேசத்துக்கே உணர்த்தும் நிலமாகத் தமிழ்நாடு இருக்கிறது. நம் தேசத்தில் பா.ஜ.க.வின் அரசியலை எதிர்த்து இந்தியக் குடியரசைக் காக்க விரும்புகிறவர்களுக்கும் ஊட்டமளிக்கும் ஜனநாயக நீரூற்றாகத் தமிழ்நாடு இருக்கும்’.

‘இந்தியாவின் வரலாற்றைத் தெற்கிலிருந்து எழுத வேண்டும்’ என்று தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சொன்னதைப் போல் இந்திய அரசியலை தெற்கிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டும்’ என்கிறார், யோகேந்திர யாதவ்.

## :ப்ளாஷ்பேக்



### தென்காசியில் தளபதி!


சி.கார்த்திக்

2014-ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், தி.மு.க. மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து, அப்போது கழகப் பொருளாளராக இருந்த தலைவர் அவர்கள், தமிழ்நாடு முழுவதும் சூறாவளிச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். தென்காசித் தொகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்துகொள்ள, தென்காசி தொகுதிக்கு வருகை தந்த போது குற்றாலத்தில் தங்கி இருந்தார். தலைவர் அவர்களை அப்போதைய செங்கோட்டை நகர தி.மு.க. செயலாளர் எஸ்.எம்.ரஹீம், நகர தி.மு.க இலக்கிய அணி அமைப்பாளர், கழகப் பேச்சாளர் என்னுடைய தந்தை செங்கோட்டை சிவா, அன்றைய இளைஞர் அணித் துணை அமைப்பாளர் ராஜா ஆகியோர் சந்தித்து, புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

**– சி.கார்த்திக், செங்கோட்டை, தென்காசி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### பசி போக்கிய கழகம்!

2002-ஆம் ஆண்டு, அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில், நெசவுத் துணிகள் தேங்கிக் கிடந்த நிலையில், ‘விலையில்லா வேட்டி-சேலைகள் வழங்கும் திட்டம்’ நிறுத்தப்பட்டது. அதையடுத்து, தமிழ்நாடு முழுவதும் நெசவாளர் குடும்பங்கள் கடும் நெருக்கடிகளைச் சந்தித்தன. அதையடுத்து, நலிவுற்ற மக்களுக்கு உதவ, கஞ்சித் தொட்டிகள் அமைத்து, பசிபோக்கும் பணிகள் செய்ய கழகத்தினரைக் கேட்டுக் கொண்டார் கலைஞர்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

634

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131